மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி, சேலம்

முன்னிலை: திரு. ஆர். ராதாகிருஷ்ணன், பி.எ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்ககிரி.

2023-ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 13-ஆம் நாள் புதன்கிழமை

திருவள்ளுவராண்டு 2054, சோபகிருது வருடம், ஆவணி திங்கள் 27 ம் நாள் புதன்கிழமை

**இ.ம.எண்.3/2022 இன் அ.வ.எண். 62/2016**

1. பச்சியம்மாள்
2. ரவிகுமார்
3. ராஜாமணி ... மனுதாரர்கள் / வாதிகள்

//எதிராக //

1. S.K. சேகர்
2. I. வெங்கடேஸ்வரன் ... எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள்

இந்த மனுவானது 30.08.2022 ஆம் நாள் இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 13.09.2023 ஆம் தேதி இறுதியாக என் முன்பு விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. M.P. செல்வராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. கிறிஸ்டோபர் அவர்கள் ஆஜராகியும், மனுவுரை, எதிருரை மற்றும் வழக்கு கோப்புகளை ஆராய்ந்தும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டறிந்தும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் இம்மனுவை கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்து மனு சொத்துக்களை வட்டார அலுவலர் உதவியுடன் பார்வையிட்டு அனைத்து சக்குபந்தி விபரங்களுடன் புல எண்களில் இருக்கும் பூஸ்திதி அமைப்பு குறித்து விரிவான அறிக்கை மற்றும் வரைபடத்தை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்:-**

மனுதாரர் அசல் வழக்கில் 2ம் வாதி. மனுதாரர் இந்த மனுவை தனக்காகவும், மற்ற மனுதாரர்களுக்காகவும் தாக்கல் செய்துள்ளார். கடந்த 25.09.2014ம் தேதி சங்ககிரி சார்பதிவாளர் அலுவலக ஆவணத்தில் பதிவு

செய்யப்பட்ட ஆவண எண்.3508/2014 செல்லாது மற்றும் இல்லா நிலையது என்று விளம்புகை செய்யக் கோரியும், நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கின் முக்கியமான பிரச்சனை எல்லை நிர்ணயம் செய்வதுதான். எல்லையை நிர்ணயம் செய்தாலே வழக்கின் பிரச்சனையானது முடிவுக்கு வந்துவிடும். மேற்கண்ட பிரச்சனையை இரு தரப்பினர்களின் சொத்து ஆவணம் மற்றும் வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் தகுந்த நில அளவையர் உதவியுடன் அளந்தால் மட்டுமே முடிவுக்கு வரும். அவ்வாறு செய்யாவிடில், சமூகம் நீதிமன்றத்தால் இயற்கையான ஒரு தீர்ப்பை வழங்க முடியாது. எனவே, வட்டார அலுவலர் உதவியுடன் பார்வையிட்டு அனைத்து சக்குபந்தி விபரங்களுடன் புல எண்களில் இருக்கும் பூஸ்திதி அமைப்பு குறித்து விரிவான அறிக்கை மற்றும் வரைபடத்தை தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-</u>**

(i) மனு பொய்யானது, அற்பமானது, சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. அசல் வழக்கின் முக்கியமான பிரச்சனை எல்லை நிர்ணயம்தான் என்று மனுதாரர்கள் கூறியுள்ளது பொய்யானதாகும். மனுதாரர்கள்/வாதிகள் மேற்கண்ட சங்கதியின் மூலம் புதிய வழக்கை உருவாக்க நினைக்கிறார்கள். வழக்கு சொத்தில் மனுதாரர்/வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை. மேற்கண்ட பிரச்சனையை இரு தரப்பினர்களின் சொத்து ஆவணம் மற்றும் வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் தகுந்த நில அளவையர் உதவியுடன் அளந்தால் மட்டுமே முடிவுக்கு வரும் என்பது பொய்யான சங்கதியாகும்.

(ii) அசல் வழக்கானது கடந்த 2016ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு, 2020ம் ஆண்டு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டது. வாதி சாட்சியாக கடந்த 2021ம் ஆண்டு விசாரிக்கப்பட்டுள்ளார். பி.வா.சா.1ன் முதன்மை சாட்சியமானது கடந்த 7 மாதங்களுக்கு முன்பாக விசாரணை செய்யப்பட்டு, பி.வா.சா.1-ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் நீதிமன்ற ஆணையரை நியமிக்கக் கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். பகுதி விசாரணை செய்துள்ள வழக்கில் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்யக் கோரி மனு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மட்டுமே இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர்களின் இந்த மனு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4) மனு பிரச்சனையை தீர்வு காணும் பொருட்டு இரு தரப்பிலும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**5) தீர்வு:-**

இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இம்மனுவானது வழக்கு சொத்துக்களை வட்டார அலுவலர் உதவியுடன் பார்வையிட்டு அளந்து சக்குபந்தி விபரங்களுடன் புல எண்களில் இருக்கும் பூஸ்திதி அமைப்பு குறித்து விரிவான அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டி மனுதாரர்/வாதியால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், அசல் வழக்கு எண்.62/2016 ஆனது விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. அசல் வழக்கில் வாதிகள் தரப்பு சாட்சியங்கள் முடிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 விசாரிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொண்டும் சாட்சிகளை விசாரிப்பதற்காக நிலுவையில் இருந்து வந்த நிலையில், இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் ஆவார்கள்.

7) மனுதாரர்கள் தரப்பில், அசல் வழக்கானது ஆவண எண்.3508/2014 ன்படியான 25.09.2014 ம் தேதியிட்ட கிரைய ஆவணம் செல்லாது மற்றும் இல்லா நிலையது என்று விளம்புகை பரிகாரம் கோரியும் மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்களுக்கிடையேயான முக்கிய பிரச்சனை என்பது எல்லைகள்தான் என்றும், எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டால் அனைத்து பிரச்சனைகளும் சரியாகிவிடும் என்று வாதிடப்பட்டது.

8) எதிர்மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கானது கடந்த 2016 ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், வழக்கு விசாரணை கடந்த 2020 ம் ஆண்டில் தொடங்கப்பட்டு வாதிகள் தரப்பு சாட்சியங்கள் 2021 ஆம் ஆண்டு முடிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் இருந்து வந்த நிலையில், மனுதாரர்கள் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யாமல், இந்த மனுவை வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர்களுக்கும், எதிர்மனுதாரர்களுக்கும் உள்ள உண்மையான பிரச்சனை என்பது எல்லை சம்பந்தமாக பிரச்சனை இல்லை என்றும்,

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் எல்லை பிரச்சனையுள்ளதாக ஒரு புதிய சங்கதிகளை முன்னிலைப்படுத்தியுள்ளதாகவும், உண்மையில் மனுதாரர்கள்/வாதிகளுக்கு வழக்கு சொத்தில் எந்த ஒரு உரிமையோ அல்லது பாத்தியமோ இல்லை என்றும், எனவே, எல்லை குறித்தான பிரச்சனை ஒருபோதும் எலாது என்று வழக்காடுகிறார்கள்.

9) வழக்குரை சங்கதிகளை கவனத்துடன் பரிசீலனை செய்கையில், அசல் வழக்கானது நீதிமன்றத்தால் வழக்கு அட்டவணை சொத்தின் எல்லையை நிர்ணயம் செய்யக்கோரி தாக்கல் செய்யப்படவில்லை. அசல் வழக்கானது வழக்கு அட்டவணை சொத்தின் எல்லையை நிர்ணயம் செய்ய தாக்கல் செய்திருந்தால் மட்டுமே நீதிமன்ற ஆணையரை நியமிப்பதால் இரு தரப்பிற்கும் உள்ள பிரச்சனையை தீர்க்க அது உதவும் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. இவ்வழக்கில் கிரைய ஆவணத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரியுள்ள நிலையில் மனுதாரர்கள் கோருவது போல் நீதிமன்ற ஆணையரை நியமித்து வழக்கு சொத்தின் எல்லைகளை நிர்ணயிப்பதால் அது இவ்வழக்கை தீர்மானிப்பதற்கு எவ்வகையிலும் உதவியாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

10) முடிவாக, நீதியின் நலன் கருதி இந்த மனுவினை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் சுருக்கெழுத்து செய்யப்பட்டு, பின்பு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, நகல் எடுக்கப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 13.09.2023 ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R RADHAKRISHNAN Digitally signed by R RADHAKRISHNAN Date: 2023.09.14 18:41:05 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.

<u>பிற்சேர்க்கை:-</u> இல்லை

R RADHAKRISHNAN Digitally signed by R RADHAKRISHNAN Date: 2023.09.14 18:41:15 +0530

மா.உ.நீ.,
சங்ககிரி.